**தலைப்பு - 426 - சேதன மற்றும் இயற்கை பசளை உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சேதன மற்றும் இயற்கை பசளை உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சேதன மற்றும் இயற்கை பசளை உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள தாக்கங்களினை தவிர்த்து, நிதிக் கூற்றுக்களினுள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேதன மற்றும் இயற்கை பசளை உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும்வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமை கூற்றின் ஆதனம் பொறி உபகரணமாக ரூபா 27,338,987 ஆன தொகை காண்பிக்கப்பட்டுள்ள போதிலும் நிதி அல்லாச் சொத்து தொடர்பானக் கூற்றில் (ஏசீஏ 6) சொத்துக்களின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 13,735,847 ஆகியமையினால் ரூபா 13,603,139 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதி அல்லாச் சொத்து தொடர்பானக் கூற்றில் (ACA 6) சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா.13,735,847 ஆகியமையினால் நிதி நிலைமை கூற்றில் ரூபா.27,338,987 என கைதவறுதலாக குறிக்கப்பட்டுள்ளது. ரூபா 13,603,139 ஆன வேறுபாடு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | வேறுபாடு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பசளை முகாமைத்துவ அமைப்பு தயாரிக்கும் போது பத்திரிக்கை விளம்பரத்திற்காக ஏற்கப்பட்ட ரூபா 132,710 ஆன செலவினம் நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் அருவச் சொத்தாக காண்பிக்கப்பட்டமையினால் நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதி அப் பெறுமானத்தினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய பசளை முகாமைத்துவ அமைப்பு தயாரிப்பதற்காக ஏற்கப்பட்ட பத்திரிக்கை விளம்பரத்திற்கான செலவினம் ரூபா 132,710 முகாமைத்துவ அமைப்பு தயாரிப்பதற்காகவே ஏற்கப்பட்டமையினால் அருவச் சொத்தாக கணக்கிடப்பட்டுள்ளது. | செலவினம் சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கட்டுநிதி மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டுநிதி கணக்குகள் தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் திறைச்சேரி புத்தகங்கள் பிரகாரம் ரூபா 5,852,092 ஆன தொகை காண்பிக்கப்பட்டிருப்பினும் அத்திகதியில் அமைச்சின் புத்தகங்கள் பிரகாரம் எந்தவொரு மீதியும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கான காரணத்தினை அக் கூற்றில் தெளிவுப்படுத்தியிருக்கவில்லை. | கட்டுநிதி கணக்குகள் தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் திறைச்சேரி புத்தகங்கள் பிரகாரம் ரூபா 5,852,092 ஆன மீதியொன்று காண்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் புத்தகங்கள் பிரகாரம் மீதியொன்று காண்பிக்கப்படாமைக்கான காரணம் அம் மீதி திறைச்சேரிக்கு மாற்றப்பட்டிருப்பதனலாகும். அம் மீதி திறைச்சேரிக்கு 2022 சனவரி 03 ஆந் திகதி மாற்றப்பட்டுள்ளது. | ஆண்டு இறுதி கட்டுநிதி கணக்கு மீதிகள் உரிய திகதில் திறைச்சேரிக்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூ | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் 396 ஆம் நிதி பிரமாணம் | 276,063 | காலங் கடந்த காசோலைகள் தொடர்பாக பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி ரூபா 276,063 ஆன காலங் கடந்த காசோலைகளில் ரூபா 2,260 பெறுமதியான காசோலை தற்போது தேறியுள்ளது. இன்னுமாக தேறுவதற்குள்ள காசோலைகளின் பெறுமதி ரூபா 273,803 ஆகும். | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையி-னால் திருத்தப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் 756 (6) ஆம் நிதி பிரமாணம். | | பொருள் மெய்மையாய்வு அறிக்கை மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டி-ருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு குழுவினால் பொருள் மெய்மையாய்வு நிறைவு செய்யப்பட்டு அறிக்கை 2022-02-20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு-ள்ளது. பொருள் மெய்மையாய்வு குழு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பொருள் மெய்மை-யாய்வு அறிக்கை குறித்த திகதியில் கணக்காய்-வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்-படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் 1646 ஆம் நிதி பிரமாணம். | | வாகனங்கள் பயணம் தொடர்பான மாதாந்த பொழிப்புக்களின் அசல் நகல் மற்றும் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய ஏப்ரல் தொடக்கம் திசெம்பர் வரையான காலத்தினுள் பயன்படுத்தப்ப-ட்ட 22 வாகனங்களுக்கு உரிய ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் 2022 ஏப்ரல் 07 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டி-ருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய அனைத்து ஓட்டக் குறிப்புக்களும் கையளிக்கப்பட்டு-ள்ளதுடன் வருங்காலத்தில் மாதத்திற்கு உரிய ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கையளிப்பதற்கு போக்குவரத்து பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டு-ள்ளது. | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.** **நிதி மீளாய்வு**

**2.1** **செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 35,554,150,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 13,926,785,924 ஆன தொகை மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிராததுடன்அதன் சதவீதம் 39 ஆகும். | Covid 19 நிலையினால் அத்தியாவசிய சேவைகள் மட்டும் மேற்கொள்ளல் மற்றும் 2235/45 ஆம் இலக்க 2021/07/07 திகதிய வர்த்தமானியின் ஊடாக 425/426 செலவு தலைப்புக்கள் ஒருங்கிணைக்கப்பட்டமை-யினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது. | சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | அத்தியாவசியமாக ஏற்கப்பட வேண்டிய செலவின விடயங்கள் அடையாளப்படுத்திக் கொண்டு நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையின் காரணத்தினால் 06 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 05 மூலதன செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 11,885,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | covid 19 காரணத்தினால் வெளிநாட்டு பயணங்கள் மட்டுப்படுத்தப்படல், புதிய அமைச்சொன்று என்பதனால் புதிய இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றமை-யினால் பழுதுபார்த்தல் தேவைகள் ஏற்படாமை, 2235/45 மற்றும் 2021/07/07 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரிக்கை ஊடாக செலவின தலைப்புக்கள் 425/426 ஒருங்கிணைக்கப்பட்டமை-யினால் சேமிக்கப்பட்டன. பசளை இராஜாங்க அமைச்சு பயன்படுத்துவது கமத்தொழில் அமைச்சின் கட்டிடமாவதனால் அவ் அமைச்சிலிருந்து ரசீதுகள் முன்வைக்கப்படாமை. | சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சரியாக கணிக்கப்படாமையின் காரணத்தினால் 10 மூலதன செலவின வியங்கள் மற்றும் 20 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 2235/45 ஆம் இலக்க 2021/07/07 திகதிய வர்த்தமானி பத்திரிக்கை ஊடாக 425/426 செலவின தலைப்பு ஒருங்கிணைத்தமையினால் சேமிக்கப்பட்டல், வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, covid 19 நிலையினால் ஊழியர் மேலதிகமாக கடமையில் ஈடுப்படுத்தப்படாமை, நிரந்த இளநிலை பதவியணி காணப்படாமை, | சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| மேற்படி மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 35,503,495,000 ஆன மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 13,912,863,724 ஆன தொகை அதாவது 39 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | பழுதுபார்த்தல்கள் ஏற்படாமை, covid 19 நிலைமையினால் பதவியணி பயிற்சி நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படாமை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ நலிவுகள்**

அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 42601 ஆம் விடய இலக்கத்தினைக் கொண்ட உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கின் உயர்ந்தபட்ச வரவு மீதி ரூபா 20,000,000 ஆனதெனிலும் அதன் உயர்ந்தபட்ச வரவு மீதி ரூபா 24,602,727 ஆகியமையினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறப்பட்ட ரூபா 4,602,727 ஆன மீதி அவதானிக்கப்பட்டது. | உயர்ந்தபட்ச வரவு மீதி உருவாகிய முறை பின்வருமாறு.<br>ரூ.<br>நிதி ஊடாக 11 — 4,373,912.00<br>குறுக்கு குறிப்பு ஊடாக 12 — 20,228,815.00<br>24,602,727.00<br>அதன் பிரகாரம் உள்ளவாராக பணமாக கடன் செலுத்தப்பட்டிருப்பது ரூபா 4,373,912.00 மட்டுமாகும். அமைச்சு அமைச்சு இடையே இடமாற்றப்பட்டு வருகைத் தந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதி குறுக்கு குறிப்பின் ஊடாக தீர்க்கப்பட்ட பெறுமதி ரூபா 20,228,815 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மீறப்படாது அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்ப மீதி மற்றும் தனிப்பட்ட மீதி பட்டியல் பிரகாரம் முற்பண மீதிகளின் இடையே ரூபா 213,021 ஆன வேறுபாடு அவதானிக்கப்படுகின்றது-டன் மேற்படி வேறுபாட்டிற்கான காரணம் தேடியறியப்பட்டு சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பிழையான செலவு வைத்தலாக இணக்க கூற்றில் உள்ளடக்கப்பட்டு கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது. | இணங்காத முற்பண மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 213,021 ஆன தொகை அடையாளப்படுத்தப்பட்டு அத் தொகை தீர்க்கப்பட்டுள்ளது. இன்னுமாக தீர்ப்பதற்குள்ள மீதி ரூபா 9244 ஆன தொகை 2022 ஆகஸ்ட் மாத்தில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | வேறுப்பாட்டிற்கு காரணத்தினை தேடியறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேதன மற்றும் இயற்கை பசளை உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட மட்டத்தின் 15 பதவிகளும், இரண்டாம் நிலை மட்டத்தின் 217 பதவிகளும், மற்றும் முதன்மை மட்டத்தின் 04 பதவிகளும் வெற்றிடமாக காணப்படினும், அப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிரேஷ்ட மட்டத்தின் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்து தருமாறு அவ்வப்போது பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இறுதி கடிதம் 2022.03.15 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. முதன்மை மட்டத்தின் பதவிகளுக்கான தேவை பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்திற்கு தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது (2021 திசெம்பர்) முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர்களின் தேவை PACIS மென்பொருளின் கீழ் 2022.03.02 ஆந் திகதி நாளதுவரையாக்கப்பட்டு கோரப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தேவை இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவி | வெற்றிட பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். பதவிகள் தேவையில்லையெனில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்தல் வேண்டும். |